கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 09.10.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதைப் பந்துகள் எறியும் நிகழ்வு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 28.09.2024 (சனிக்கிழமை) அன்று மாபெரும் விதைப்பந்து தயாரிப்பு நிகழ்ச்சியை நடத்தியது. பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வெ.கீதாலட்சுமி அவர்களின் தலைமையில் சுமார் 1000 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த மாபெரும் நிகழ்வில் கலந்து கொண்டு சுமார் 15000 க்கும் மேற்பட்ட விதை பந்துகளை தயார் செய்தனர்.

இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக, சுமார் 200 வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் 07.10.2024 (திங்கட்கிழமை) அன்று காரமடை வனச்சரகத்திற்குச் சென்று 15000க்கும் மேற்பட்ட விதைப் பந்துகளை தமிழ்நாடு வனத்துறை, ITC–Limited மற்றும் COODU என்.ஜி.ஓ., காரமடை ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன், விதை பந்துகள் வனப்பகுதிக்குள் வீசப்பட்டன. பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வெ.கீதாலட்சுமி கொடியசைத்து தொடங்கி வைத்தார். காரமடை வனப்பகுதியில் வனச்சரக அலுவலர் திரு.ரஞ்சித் அவர்கள் விதைப்பந்துகளை வீசி மாணவர்களுக்கு வழிகாட்டினார். எதிர்காலத்தில், இது காடுகளின் பரப்பை மேம்படுத்தும், வன நீர்நிலைகளின் நீர்நிலை நடத்தையை மேம்படுத்தும் மற்றும் வனவிலங்குகளுக்கு தங்குமிடமாக இருக்கும்.

வன சுற்றுச்சூழல் மற்றும் உயிர் பன்முகத்தன்மை பற்றிய விழிப்புணர்வு மற்றும் அறிவைப் பெறுவதற்காக, விளக்கக்காட்சி வழங்கும் போட்டி மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் அவர்கள் முன்னிலையில் பரிசுகள் வழங்கப்பட்டன. உணவு செயல்முறை பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பாலகிருஷ்ணன், கோயம்புத்தூர் ஐடிசி–லிமிடெட் திட்ட மேலாளர் திரு.தினேஷ் மற்றும் COODU NGO இயக்குனர் திரு.கதிரேசன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உலக வனவிலங்கு வாரம் 2024ஐக் கருத்தில் கொண்டு இந்த மாபெரும் நிகழ்வை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதை மையம், Eco Club, MasonAGE Club, Food Club, Rotaract Club, NSS மற்றும் தமிழ்நாடு வனத்துறை, ITC–லிமிடெட், கோயம்புத்தூர் மற்றும் COODU NGO, காரமடை ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன.

**மக்கள் தொடர்பு அலுவலர்**